**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SC No. 106/2023**

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ஆம் நாள் செவ்வாய் கிழமை ப.சா.11/அ.சா.9 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி.செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மணிகண்டன் | த/பெ.: | முனியாண்டி |
| கிராமம்: | பாண்டி சத்திரம் | தாலுக்கா: | முத்துப்பேட்டை |
| மதம்: | இந்து | தொழில்: | தனியார் டிரைவர் |
| வயது: | 38 | முகவரி: | பாண்டி சத்திரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 08.04.2025

**முதல் விசாரணை:_**

நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 14.02.2022-ல் சந்தியாவின் சித்தப்பா சுரேஷ்குமார் என்பவர் சந்தியா இறந்துவிட்டதாக போன் மூலமாக தகவல் சொன்னார். அப்பொழுது மாலை 5.30 மணி இருக்கும். அப்பொழுது நான் சென்னையில் இருந்தேன். போன் வந்ததால் கிளம்பி ஊருக்கு வந்தேன். பின் காவல் நிலையம் சென்றேன். பிரேத புலன் விசாரணை அறிக்கையை 3ம் பக்கத்தில் 4வதாக போடப்பட்டுள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.4** ஆகும். திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் 15.02.2022-அன்று சவகிடங்கு முன்பாக பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. போலீசார் என்னிடம் சாட்சி கையெழுத்து போடும்படி கேட்டார்கள். நான் சாட்சி கையெழுத்து போட்டேன். என்னுடன் மாரிமுத்து, மாதவன், சுரேஷ் ஆகியோர்களும் கையெழுத்து போட்டார்கள். மாரிமுத்து (அ.சா.1) என்பவர் பாமணி சிவன் கோவில் தெருவில் குடியிருந்து வந்தார். எதிரி யோகேஷ் என்பவர் ஏற்கனவே மாரிமுத்து என்பவரின் மகளான சந்தியா என்பவருக்கு தொலைபேசி மூலமாக போன் செய்தது

சம்மந்தமாக கிராம முக்கியஸ்தர்கள் முன்னிலையில் கண்டித்து அனுப்பிவிட்டார்கள். அதற்கு பிறகு அ.சா.1 மாரிமுத்து வீட்டை காலி செய்துவிட்டு பாமணியிலுள்ள பாரதியார் தெருவிற்கு சென்றுவிட்டது. பின்னர் 14.02.2022-ம் தேதி எதிரி போன்லிருந்து அ.சா.1ன் மாரிமுத்துவின் மனைவி கஸ்தூரிக்கு போன் வந்தது. அதற்கு பிறகுதான் சந்தியா தூக்கு மாட்டி இறந்துவிட்டதாக நான் தெரிந்துகொண்டேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.